**பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை – 600 006.**

**தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005**

**ந.க.எண்.40487/F/RTI/2022, நாள். 14.07.2022**

**பொருள் :** தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005 – திரு.M.ஈஸ்வரன். என்பாரின் மனு உரிய நடவடிக்கைக்கு அனுப்புதல் – சார்ந்து.

**பார்வை :** திருவண்ணாமைலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.M.ஈஸ்வரன் என்பாரின் மனு நாள் 07.06.2022

-----

இவ்வாணையரகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் படி பெறப்பட்ட மனு இணைப்புகளுடன் மேற்படி சட்டத்தின் உட்பிரிவு 6(3)-ன்படி இனம் 7,8,11,17 மற்றும் 22-ற்கான தகவல் வழங்க உரிய நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005-ன் முக்கியத்துவம் கருதி மனுதாரருக்கு உரிய காலக்கெடுவிற்குள் தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதில் காலதாமதம் ஏற்படின் சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலரே முழுப் பொறுப்பு ஏற்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு** : அசல் மனு தாள் -01

**பொதுத்தகவல் அலுவலர் மற்றும்**
**துணை இயக்குநர் (மின் ஆளுமை)**

**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
அனைத்து மாவட்டங்கள் (மின்னஞ்சல் மூலம்)

**நகல்**
திரு.M.ஈஸ்வரன்,
2/174, பாடசாலை தெரு,
ஆதமங்கலம் புதூர்,
கலசபாக்கம் தாலுகா,
திருவண்ணாமலை – 606901.

- இந்நேர்வில் மேல்முறையீட்டு அலுவலர் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் ஆவார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் காலங்களில் இப்பொருள் சார்ந்த தகவல்களுக்கு பெறுநர் முகவரியில் குறிப்பிட்டுள்ள அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

ஏ2 TRB, சி3, Budget 7-6-2022

முதல் மேல்முறையீட்டு மனு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005.

40487

29123
21-5-2022

10 रु. COURT FEE Rs.10 भारत INDIA दस रुपये TEN RUPEES

63

6(3)

அனுப்புநர்:

M. ஈஸ்வரன்
S/o மகேஸ்வரன்
2/174 - பாடசாலை தெரு.
கல்சபாக்கம் (T.K). திருவண்ணாமலை மாவட்டம்
பி. 606 901. - Call: 9025886299

13,14,15

பெறுநர்:

உயர்திரு. பள்ளிக்கல்வி ஆணையர் அவர்கள்,
பள்ளிக் கல்வி ஆணையரகம்.
DPI - வளாகம் சென்னை - 600 006.

பொருள்:

13-4-2022 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டபடி சில தகவல்களை கேட்டு தங்கள் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி இருந்தேன் அதன்மேல் உரிய நடவடிக்கை எடுக்க கோருதல் சார்பு.

ஐயா,

வணக்கம் நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பள்ளிக் கல்வி ஆணையரிடம் சில தகவல்களை கேட்டு 13-4-2022 அன்று கடிதம் அனுப்பி இருந்தேன் அதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உடனே எனது RTI - மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

*. 13-4-2022 மனு நகல் இணைக்கப்பட்டுள்ளது

இப்படிக்கு
M. ஈஸ்வரன்
7-6-2022

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005

அனுப்புனர். நாள் : 13/04/2022

M. ஈஸ்வரன்,

S/O மகேஸ்வரன் ,

2/174 - பாடசாலை தெரு, ஆதமங்கலம் புதூர் ,

கலசபாக்கம் தாலுகா,

திருவண்ணாமலை மாவட்டம்,

பின்கோடு : 606 901.

தொலைபேசி எண் : 7639165148. 7339549520.

பெறுநர் :

உயர்திரு. பள்ளிக்கல்வி ஆணையர் அவர்கள்,

பள்ளிக் கல்வி ஆணையரகம்,

DPI - வளாகம் சென்னை - 600 006.

பொருள் :

2005 RTI தகவல் உரிமை பெரும் சட்டத்தின்படி கீழ்கண்ட தகவல்களை கோருதல் சார்பு.

ஐயா :

வணக்கம் நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் கீழ்கண்ட சில தகவல்களை பெற விரும்புகிறேன்.

**தகவல் - 1.**

2009 RTE சட்டம் **மத்திய அரசு** எப்போது நடைமுறைக்கு கொண்டு வந்தது. கொண்டுவந்த நாள் மற்றும் அரசாணை எண். (அதன் நகலை தகவலில் வழங்கவும்.)

**தகவல் - 2.**

2009 RTE சட்டம் **மாநில அரசு** எப்போது நடைமுறைக்கு கொண்டு வந்தது. கொண்டு வந்த நாள் மற்றும் அரசாணை எண் . (அதன் நகலை தகவலில் வழங்கவும்.)

**தகவல் - 3.**

2009 RTE சட்டப்படி மத்திய அரசு CTET ( ஆசிரியர் தகுதி தேர்வு 2009 முதல் 2022 வரை ) தேர்வு இதுவரை எத்தனை முறை தேர்வுகளை நடத்தி உள்ளது. தேர்வு நடைபெற்ற நாள் மற்றும் ஆண்டு தகவலில் வழங்கவும்.

**தகவல் - 4.**

2009 RTE சட்டப்படி மாநில அரசு TET (ஆசிரியர் தகுதி தேர்வு 2009 முதல் 2022 வரை ) தேர்வு இதுவரை எத்தனை முறை தேர்வுகளை நடத்தி உள்ளது. தேர்வு நடைபெற்ற நாள் மற்றும் ஆண்டு தகவலில் வழங்கவும்.

**தகவல் - 5.**

2009 RTE சட்டப்படி தமிழ்நாடு மாநில அரசின் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிய CTET or TET தேர்வுகளில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டுமா. இத்தேர்வானது எந்த ஆண்டில் ஆசிரியராக பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் பொருந்தும். (அதற்கான அரசாணை நகலை தகவலின் வழங்கவும் )

**தகவல் - 6.**

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மத்திய, மாநில அரசு நடத்தும் தகுதித் தேர்வில் (CTET or TET) இரண்டில் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர் ஆசிரியருக்கான தகுதி உடையவரா?

தகுதி உடையவர் எனில் அதற்கான விதிமுறைகள் ஏதாவது இருப்பின் அரசாணை நகலை இணைக்கவும் அல்லது தகவலில் வழங்கவும்.

**தகவல் - 7.**

2009 RTE சட்டப்படி தமிழ்நாடு மாநில அரசின் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிய (CTET or TET)தேர்வுகளில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் எத்தனை நபர்கள் உள்ளார்கள்.

(அந்த ஆசிரியரின் பெயர் , பிறந்த தேதி , தந்தையின் பெயர், தற்போது பணிபுரிந்து வரும் பள்ளியின் முழு முகவரி, மற்றும் கல்வி மாவட்டம் ) விவரங்களை தகவலில் வழங்கவும்.

**கீழ்கண்ட பள்ளி வாரியாக விவரங்களை தகவலில் வழங்கவும்.**

1) அரசு பள்ளி, ( தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் )

2) அரசு நிதி உதவி பெறும் பள்ளி,

3) சிறுபான்மையர் நலத்துறைப் பள்ளி,

4) பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி,

5) ஆதிதிராவிட நலத்துறைப் பள்ளி,

6) வனத்துறைப் பள்ளிகள்,

7) நகராட்சி , மாநகராட்சி பள்ளிகள்,

8) கள்ளர் நலத்துறை பள்ளிகள்

9) கிருத்துவ , புத்த, சமண மத பள்ளிகள்.

10) மத்திய அரசின் கீழ் செயல்படும் பள்ளிகள் . ( தமிழ்நாடு மாநில எல்லைக்குள் இருக்கும் பள்ளிகள் )

**தகவல் - 8.**

தமிழக பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 2009 RTE சட்டப்படி TET, CTET தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல் எத்தனை ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஆசிரியரின் பெயர், அவர் பணியில் சேர்ந்த நாள், ( அவர் பணியில் சேர்ந்த நாளில் இருந்து தற்போது வரை எவ்வளவு தொகை ஊதியமாக பெற்றுள்ளார் ) அவர் பெற்ற முதல் மாதச் சம்பளம் , மற்றும் 31-03-2022 அன்றுவரை அவர் பெற்ற மாத சம்பளம் தகவலில் வழங்கவும்.

**கீழ்கண்ட பள்ளி வாரியாக விவரங்களை தகவலில் வழங்கவும்.**

All CEOs 6(3) f Ele

1) அரசு பள்ளி, ( தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் )

2) அரசு நிதி உதவி பெறும் பள்ளி,

3) சிறுபான்மையர் நலத்துறைப் பள்ளி,

4) பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி,

5) ஆதிதிராவிட நலத்துறைப் பள்ளி,

6) வனத்துறைப் பள்ளிகள்,

7) நகராட்சி , மாநகராட்சி பள்ளிகள்,

8) கள்ளர் நலத்துறை பள்ளிகள்

9) கிருத்துவ , புத்த, சமண மத பள்ளிகள்.

10) மத்திய அரசின் கீழ் செயல்படும் பள்ளிகள் . ( தமிழ்நாடு மாநில எல்லைக்குள் இருக்கும் பள்ளிகள் )

**தகவல் - 9.**

G12

2009 RTE சட்டப்படி நடைமுறைக்கு வந்த பிறகுத தற்பொழுது 2009 - 2022 மார்ச் 31 வரை, மத்திய அரசிடம் இருந்து எவ்வளவு தொகை, மாநில அரசு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மட்டுமே ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு தொகையை மாநில அரசு பெற்றுள்ளது.

**தகவல் - 10.**

2009 ஆண்டு முதல் 31-03-2022 தற்போது வரை, தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் **ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளமாக** எவ்வளவு தொகையை மக்களின் வரிப்பணத்திலிருந்து செலவிடப்படுகிறது. **(ஒவ்வொரு ஆண்டும் செலவிடப்பட்ட தொகையை குறிப்பிடவும் )**

Budget

**தகவல் - 11.**

2009 RTE சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் எத்தனை பேர் (இடைநிலை ஆசிரியர்கள், இளநிலை பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள்) தங்களின் ஆசிரியர் பணிக்கான கல்வித் தகுதியை முழுமை பெறாமல் உள்ளார்கள்.

All CEO'S

( அதாவது +2, B.A., B.Ed., மற்றும் M.A., முழுமை பெறாமல் பதவி உயர்வின் மூலம் ஆசிரியராக பணிபுரிந்து வருபவர்கள்)

( அந்த ஆசிரியரின் பெயர் , பிறந்த தேதி , தந்தையின் பெயர், தற்போது பணிபுரிந்து வரும் பள்ளியின் முழு முகவரி, மற்றும் கல்வி மாவட்டம் )

**கீழ்கண்ட பள்ளி வாரியாக விவரங்களை தகவலில் வழங்கவும்.**

1) அரசு பள்ளி, ( தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் )

2) அரசு நிதி உதவி பெறும் பள்ளி,

3) சிறுபான்மையர் நலத்துறைப் பள்ளி,

4) பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி,

5) ஆதிதிராவிட நலத்துறைப் பள்ளி,

6) வனத்துறைப் பள்ளிகள்,

7) நகராட்சி , மாநகராட்சி பள்ளிகள்,

8) கள்ளர் நலத்துறை பள்ளிகள்

9) கிருத்துவ , புத்த, சமண மத பள்ளிகள்.

10) மத்திய அரசின் கீழ் செயல்படும் பள்ளிகள் . ( தமிழ்நாடு மாநில எல்லைக்குள் இருக்கும் பள்ளிகள் )

**தகவல் - 12.**

2009 RTE சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களில் TET, CTET தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல் உள்ளவர்களுக்கு எத்தனை முறை அரசு தேர்ச்சி பெறுவதில் இருந்து கால நீட்டிப்பு செய்துள்ளது.

C2

(கால நீட்டிப்பு செய்த ஒவ்வொருமுறையும் அதற்கான அரசாணை எண் அரசாணை வெளியிடப்பட்ட நாள் மற்றும் தேதி குறிப்பிடவும் மற்றும் அதற்கான நகலையும் தகவலில் வழங்கவும் )

**தகவல் - 13.**

நான் தற்பொழுது M. A., B. Ed., மற்றும் D. T. Ed., தேர்ச்சி பெற்று உள்ளேன் (முறையாக மத்திய அரசு மற்றும் மாநில அரசு அங்கீகரித்த பல்கலைகழகங்களில் முறையான கல்வியைப் பயின்று பட்டம் பெற்றுள்ளேன் ) தற்போது அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிய நான் **கட்டாயம் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமா.**

**தகவல் - 14.**

தமிழக பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிய

1) தொடக்கப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரை ஆசிரியராகப் பணிபுரிய என்ன கல்வித் தகுதி வேண்டும் + ஆசிரியர் தகுதி தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமா. ( CTET, TET Paper -1 )

2) நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 வகுப்பு முதல் 8 வகுப்பு வரை ஆசிரியராகப் பணிபுரிய என்ன கல்வித் தகுதி வேண்டும் + ஆசிரியர் தகுதி தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமா. ( CTET, TET Paper -2 )

**தகவல் - 15.**

2009 RTE சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களில் கட்டாயம் TET, CTET தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமா. **அதற்கான அரசாணை எண் மற்றும் வெளியிட்ட நாள், நகலைத் தகவலில் வழங்கவும்**.

**தகவல் - 16.**

31-03-2022 அன்றுவரை தொடக்கப்பள்ளிகள், ஆசிரியர்களுக்கான காலி பணியிடங்களை விவரத்தை ( கல்வி மாவட்ட வாரியாக விபரத்தை வழங்கவும்) **தகவலில் வழங்கவும்** .

**தகவல் - 17.**

31-03-2022 அன்றுவரை நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி பாட வாரியாக ஆசிரியர் காலிப்பணியிட விவரத்தை (கல்வி மாவட்ட வாரியாக வழங்கவும்) தகவலில் வழங்கவும்.

**தகவல் - 18.**

**மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி** ஒரு பள்ளியில் எத்தனை மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் பணிபுரிய வேண்டும் விகிதாசாரத்தை குறிப்பிடவும்.

மற்றும் **மாநில அரசின் வழிகாட்டுதலின்படி** ஒரு பள்ளியில் எத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாசாரத்தை குறிப்பிடவும் **அரசாணை எண் . (அதன் நகலை நகலை தகவலில் வழங்கவும்.)**

**தகவல் - 19.**

ஒரு நடுநிலைப் பள்ளியில் எத்தனை இளநிலை பட்டதாரி ஆசிரியர் பணி புரியவேண்டும், உயர்நிலைப் பள்ளியில் எத்தனை இளநிலை பட்டதாரி ஆசிரியர் பணி புரிய வேண்டும். எத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாசாரத்தை குறிப்பிடவும். **அரசாணை எண் . (அதன் நகலை நகலை தகவலில் வழங்கவும்.)**

**தகவல் - 20.**

தொடக்கப் பள்ளிகளில் ஒரு பள்ளியில் எத்தனை மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் பணிபுரிய வேண்டும் விகிதாசாரத்தை குறிப்பிடவும்.

**அரசாணை எண் . (அதன் நகலை நகலை தகவலில் வழங்கவும்.)**

**தகவல் - 21.**

2009 RTE நடைமுறைக்கு வந்த பிறகு கல்வித்தகுதி முழுமை பெறாத ஆசிரியர்கள் ஏதாவது சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டதா, அதாவது பல்கலைக்கழகங்கள் அல்லது NCERT or DTERT மூலம் பயிற்சி வழங்கப்பட்டு இருப்பின், பயிற்சி வழங்கிய நாள் பயிற்சி வழங்குவதற்கான அரசு ஆணை எண் வழிகாட்டு நெறிமுறைகள் தகவலில் குறிப்பிடவும் **( நகலை வழங்கவும். )**

பயிற்சி வழங்கிய பல்கலைகழகம் பெயர் மற்றும் வழங்கியதற்கான பயிற்சி வழங்கிய விவரங்கள், எத்தனை நாள் பயிற்சி வழங்கப்பட்டது, நேரடி பயிற்சி வகுப்பு அல்லது பகுதி நேர பயிற்சி வகுப்பு வழங்கிய விவரங்கள், பயிற்சி வகுப்பு ஒரு நாளில் எத்தனை மணி நேரம் நடைபெற்றது. மொத்தம் எத்தனை நாட்கள் நடைபெற்றது அதற்கு தேர்வு நடத்தப்பட்டதா என்பதை விவரங்களை குறிப்பிடவும்.

**எத்தனை ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.**

(அவர்கள் பற்றிய விவரங்களை குறிப்பிடவும். **பெயர், பிறந்த தேதி, கல்வித்தகுதி, பணிபுரியும் பள்ளி** )

**தகவல் - 22.**

அரசு பள்ளியில் ஆசிரியராக நியமிக்கப்படும் ஒரு நபர் B.A., B.Ed,. D.T.Ed,. கல்விச் சான்றிதமை, சான்றிதழ் சரிபார்ப்பு நிகழ்வின் பொழுது அலுவலர் என்னென்ன நிகழ்வுகளை கருத்தில் கொள்கிறார்.

(அதாவது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒரு மாணவர் பெற்ற சான்றிதழ் அந்த ஆண்டிற்கான அந்தக் கல்லூரி அங்கீகாரம் பெற்றுள்ளதா என்றும் மற்றும் அந்தக் கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்கிய பல்கலைகழகமும் அந்த ஆண்டிற்கு அந்த கல்வித்தகுதிக்கு ( பாடப் பிரிவிற்கு) அந்தப் பல்கலைக்கழகம் முறையான அங்கீகாரம் யுஜிசி இடம் பெற்றுள்ளதா சான்றிதழ் சரிபார்ப்பின் போது அந்த அலுவலர் கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டுமா .

ஆசிரியர் பணி நியமனத்தின்போது சான்றிதழ் சரிபார்ப்பில் என்னென்ன தகவல்களை அவசியம் அலுவலர் கவனிக்கப்பட வேண்டும். **(அதற்கான விதிமுறைகள் அரசாணை எண் நகலை தகவல் வழங்கவும்)**

இந்த தகவல்களை இதற்கு முன் சான்றிதழ் சரிபார்ப்பின் போது பின்பற்றிய நடை முறைகளின் / விதிமுறைகளை படி **நகலாக வழங்குவோம்**.

**<u>தகவல் - 23.</u>**

2009 RTE சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு SSA, RMSA திட்டங்கள் மூலம் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா. அதாவது நிரந்தர பணியிடமாகவும் அல்லது தற்காலிக பணியிடமாகவும் இருக்கலாம்.

அந்த ஆசிரியர்களின் பெயர், பணிபுரியும் இடம், பணியில் சேர்ந்த நாள், அவரை மாதச் சம்பளம் எவ்வளவு , அவரது கல்வித்தகுதி, **ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று உள்ளாரா** என்ற விவரத்தையும் குறிப்பிடவும். தற்போது எந்த வகுப்பு ஆசிரியராக அவர் நியமனம் செய்யப்பட்டு உள்ளார் என்பதையும் தகவலில் வழங்கவும். (நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எவ்வளவு காலம் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது, எத்தனை முறை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது, என்பதற்கான **அரசாணை நகலை தகவலில் வழங்கவும்**.) தற்பொழுது அவர்கள் பணியில் உள்ளார்கள் என்பதையும் குறிப்பிடவும்.

**<u>தகவல் - 24.</u>**

TET ஆசிரியர் தகுதித் தேர்வில் 2013, 2014, 2017, 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வில் எத்தனை பேர் தேர்ச்சி அடைந்து உள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி அடைந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்பதை தகவலில் குறிப்பிடவும்.

(தேர்ச்சி அடைந்தவர்கள் பெயர் பட்டியலை வழங்கவும் தேர்வு எண், பெயர் பிறந்த தேதி, வகுப்பு , மாவட்டம், முழு முகவரி, தொலைபேசி எண் **தகவலில் வழங்கவும்**.)

மேற்கண்ட தகவல்களை கனிவுடன் பரிசீலனை செய்து தயவுகூர்ந்து விரைந்து வழங்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

( M. ஈஸ்வரன்)

நாள் : 13/04/2022.

இடம் : ஆதமங்கலம் புதூர்.